Conference of Commercial Tax Officers

* 131 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether there is any proposal to hold a conference of Commercial Tax Officers to review the working of the department; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள வர்த்தகக் கழகங்கள், வணிக வரி விதிப்பது சம்பந்தமாக சில ஆலோசனைகளைக் கூறுவதற்காக வியாபாரிகளைக் கொண்ட அங்கம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. ஆகவே, இதை அனுமதிக்க மறுக்கிறேன்.

மாநில வக்ப் போர்டு

* 132 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முஸ்லீம் வக்ப் போர்டு எப்போது கலைக்கப்பட்டது ?

(இ) இது கலைக்கப்பட்டதன் காரணம் என்ன ?

(உ) புதிய அங்கத்தினர்களைக் கொண்ட வக்ப் போர்டு எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அரசு வக்ப்போர்டு நிர்வாகம் சரிவர இயங்காததால் 20—11—1967-ல் கலைக்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு அரசு வக்ப் போர்டு 24—5—1971-ல் மீண்டும் அமைக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, மீண்டும் அமைக்கப் பட்டிருக்கிற வக்ப் போர்டில், விதிகளில் குறிப்பிட்டிருப்பதுபோல, சட்டசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிலே இருக்கின்ற விதிகள் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ? அல்லது அமைக்கப்பட்ட வக்ப் போர்டிலிருந்து யாராவது ராஜினாமாச் செய்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அமைக்கப்பட்ட வக்ப் போர்டின் விதிமுறைகளுக்குட்பட்டு அம் மாதிரியான சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைக்கப் படவேண்டுமென்று குறிப்பில் கூறவில்லை. அவர்களும் இருக்கலாம்